# பழந்தமிழ் இலக்கிய நூல்களை ஒழுங்கமைத்தலில் தூயி தசம பகுப்பாக்க விதிமுறைகளின் பிரயோகம் : ஒரு விளக்கநிலை ஆய்வு

மைதிலி விசாகரூபன்

**ஆய்வுச்சுருக்கம்**

நூலகங்கள் நல்லமுறையில் சேவைபுரிய வேண்டுமானால் அங்கு சேகரிக்கப்படும் ஆவணங்கள் யாவும் பயனுடையவகையிலும் நிரந்தரமாகவும் புத்தகத் தட்டுக்களிலே ஒழுங்கமைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. சரியான முறையில் ஒழுங்கமைப்பதன் மூலம் மாத்திரமே நூல்களை எளிதில் இனங்கண்டு பயன்படுத்திக்கொள்ள முடியும். நூலகங்களின் இத்தகைய ஒழுங்கமைப்புச் செயற்பாட்டிற்கு அடிப்படையாக உள்ளவை நூலகப்பகுப்பாக்க மற்றும் பட்டியலாக்க விதிமுறைகள் ஆகும். இதற்கான கருவிநூல்களாக தூயிதசமப் பகுப்பாக்கம், ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்கம் ஆகியவை இரண்டும் இலங்கையின் நூலகங்களிலே அதிகளவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விதிமுறைகள் மேனாட்டார் சிந்தனையில் உதித்து உருக்கொண்டவை ஆகும். இவை கீழைத்தேய பழந்தமிழ் நூல்களை ஒழுங்கமைத்துக்கொள்வது தொடர்பான விதிமுறைகளை நுணுக்கமாக உருவாக்குவதில் பெரிதும் சிரத்தை கொள்ளவில்லை. சங்க மற்றும் சங்கமருவிய காலத்தமிழ் இலக்கியங்கள் தமிழ்மொழியின் செந்நெறி இலக்கியங்களாக விதந்துரைக்கப்படுகின்றன. இவை தமிழ் மரபிற்கேயுரிய தனித்துவம் வாய்ந்த இலக்கியத் தொகுதிகள் ஆகும். இந்நூல்கள் எமது பிரதேசத்திலேயே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இவை நூலகங்களிலே அதிக எண்ணிக்கையில் சேகரிக்கப்படுகின்றன. ஏனைய பிரதேசங்களிலிருந்தும் இத்தகைய நூல்களைத்தேடி வாசகர் எமது பிரதேச நூலகங்களுக்கே வருகை தருகின்றனர். எனவே இவற்றைக் கருத்துள்ள வகையில் நுணுக்கமாக ஒழுங்கமைத்துப் பாதுகாக்க வேண்டிய பாரிய கடமைப்பாடு எமது பிரதேச நூலகவியலாளர்களுக்கு உண்டு. பிரதேச வெளியீடுகளை ஒழுங்கமைக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள் இதுவரை காணப்படவில்லை. இதனால் மேனாட்டாரது விதிமுறைகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. தூயிதசமப் பகுப்பாக்கம் இலக்கிய நூல்களுக்கான ஒழுங்கமைப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது உலகின் முதன்மை மொழிகளிலமைந்த இலக்கியங்களான ஆங்கில, ஜெர்மனிய, பிரான்சிய, இத்தாலிய, ஸ்பானிய, இலத்தீன் மற்றும் கிரேக்க, இலக்கியங்களை ஒழுங்குபடுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு குறிப்பிடப் பிடுகின்றது. அந்த அறிவுறுத்தல்களைச் செவ்வனே பழந்தமிழ் இலக்கியங்களுடன் பொருந்திப்பார்த்து ஒழுங்கமைக்கும் போது, நடைமுறையில் சில ஒவ்வாத தன்மைகள் உணரப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை சங்கஇலக்கியப் பத்துப்பாட்டு நூல்களுள் முதலாவது நூலக வகையீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தூயிதசமப் பகுப்பாக்கத்தின் துணை அட்டவணை (3 - A) குறிப்பிடும் உருவகப் பிரிவுகளின்படி தமிழ்க்கவிதை நூலாக ஒழுங்கமைத்துக் கொள்ளலாம். அல்லது திருமுருகாற்றுப்படை கூறும் உட்பொருளை அடிப்படையாகக் கொண்டு அறுவகைச் சமய நெறிகளுள் ஒன்றாகக் கருதி கௌமாரம் பற்றிக் கூறும் நூல்களுடனும். ஒழுங்கமைத்துக்கொள்ளலாம். இவ்வாறே பதினெண் கீழ்க்கணக்கு நூலாகிய திருக்குறள் தமிழ்க்கவிதை என்பதனுள் ஒழுங்கமைக்கப்படலாம் அல்லது நீதிநூல் என்னும் வகையால் தூயிதசமப் பகுப்பாக்கம் குறப்பிடும் ஒழுக்கவியல் என்ற பாடத்துறைக்குள் ஒழுங்கமைக்கப்படலாம். இவ்வாறான சூழ்நிலையில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்மேற்கணக்கு பதினெண்கீழ்க்கணக்கு என்ற பழந்தமிழ் இலக்கியத்தொகுதிகளைக் குறிப்பிடும் மரபுவழிபட்ட சொற்றொடர்களைச் சீரமைவுத் தலைபங்கங்களாக உபயோகித்து வேறுபட்ட உட்பொருள்களைக் கொண்ட நூல்களை ஒரே பாடத்துறைக்குள் ஒரு தொகுதியாக ஒழுங்குபடுத்துவது பொருத்தமானதா? என்பதில் தெளிவின்மை காணப்படுகின்றது. இந்நிலையில் பழந்தமிழ் இலக்கியங்களை

ஒழுங்கமைப்பதில் பகுப்பாக்க, பட்டியலாக்க விதிமுறைகளின் நேரடியான அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒழுங்கமைத்துக் கொள்வதிலும் பார்க்க அவற்றின் துணையோடு சுயதீர்மானங்களை மேற்கொண்டு இவற்றை ஒழுங்கமைக்கவேண்டிய தேவை உள்ளது என்பது இந்த ஆய்வின் கருதுகோள் ஆகும். மேனாட்டார் மரபிலமைந்த தகவல் ஒழுங்கமைப்பு விதிமுறைகளைப் பயன்படுத்திப் பழந்தமிழ் இலக்கியங்களை ஒழுங்கமைக்கும் போது ஏற்படுகின்ற சவால்களை இனங்காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும். தொன்மைச் செம்மொழியான தமிழ்மொழியின் சங்க மற்றும் சங்கமருவியகால இலக்கியங்கள் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. விளக்கவியல் ஆய்வுமுறை, ஒப்பீட்டு ஆய்வுமுறை மற்றும் மதிப்பீட்டு ஆய்வுமுறை என்ற ஆய்வுமுறையியல்களினூடாக இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. ஆராய்ச்சி நூலகமொன்றில் வாசகருக்கான நுண்ணிய தகவல் ஒழுங்கமைப்பு முறை இங்கு கவனத்திற்கொள்ளப்படுகிறது. தகவல் ஒழுங்கமைப்பிலே நூலின் உட்பொருள் சார்ந்த முதன்மைக்கும் அணுகுவதில் இலகுவான தன்மைக்கும் கூடிய கவனஞ் செலுத்தப்பட வேண்டும் இவ் ஆய்வில் வலியுறுத்தப்படுகிறது.

**திறவுச்சொற்கள் :** நூலகத் தகவல் சாதனங்களின் ஒழுங்கமைப்பு, நூலகப்பட்டியலாக்கம், நூலகப்பகுப்பாக்கம்.

## 1. அறிமுகம்

நூலகம் ஒன்று அதன் வாசகர்களுக்கு முழுமையான தகவல்களை வழங்குவதில் தெளிவான கோட்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அதற்கமைய நூலகத் தகவல் சாதனங்களை ஒழுங்குபடுத்துவது முக்கிய மானது. நூலக சாதனங்களை ஒழுங்குபடுத்தும் நடைமுறையில் பகுப்பாக்கம் மற்றும் பட்டியலாக்கம் ஆகிய இரண்டும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தச் செயற்பாடுகளை நூலகங்களிலே மேற்கொள்வதற்கு மெல்வில்டூயி (1876) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட தூயிதசமப் பகுப்பாக்கத் திட்டமும், சி. ஏ. கட்டர் (1876) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்க விதிமுறையும் அடிப்படையான கருவி நூல்களாக உள்ளன. இவற்றின் உள்ளடக்கமும், பிரயோக நிலையில் உணரப்படும் இலகு தன்மையும் காரணமாக நூலகவியலாளர் இவற்றைப் பெரியளவில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நூல்களைப் பகுப்பாக்கம் செய்வது என்பது அவைகூறும் உட்பொருளின் அடிப்படையில் ஒத்தவகையான பாடத்துறைகள் யாவற்றையும் ஒரேயிடத்தில் வரிசைப்படுத்தி வைக்கும் செயற்பாடாகும் நூற்பகுப்பு நடைமுறையின் போது குறிப்பிட்ட ஒரு நூலின் உட்பொருள் குறியீட்டு வடிவில் செயற்கையான மொழிமாற்றம் செய்யப்படுகின்றது. இது ஒரே வகையான விடயப் பரப்பை இலகுவான முறையில் ஓரிடப்படுத்தவும் தேவையான நூலை இனங்கண்டு கொள்ளவும் பெரிதும் உபயோகப்படுகின்றது. ஒரு நூலகம் குறைவான அளவுநூல்களைக் கொண்டிருந்தால் இத்தகைய ஒரு விளக்கமான வரிசைமுறை தேவையில்லை. ஆனால் நூற்சேகரிப்பு அதிகமானதாக இருந்தால் நூல்களைத் தேடியெடுப்பதும், பயன்படுத்திய நூல்களை மீண்டும் அதே இடத்தில் இறாக்கைப் படுத்துவதும் மிகவும் சிரமமானது. இந்நிலையில் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு பகுப்புமுறை அந்த நூலகத்திற்குத் தேவைப்படுகின்றது.

## 2. ஆய்வுஎல்லை

பழந்தமிழ் இலக்கியங்களுக்கு மிக நீண்ட தொரு வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. தமிழ் இலக்கியங்களின் வரலாற்றினைக் கூறும் நூல்கள் பலவுள்ளன. தமிழ்இலக்கியங்களின் பண்பினடிப்படையிலும், அரசியல் மற்றும்

சமய அடிப்படையிலுமெனத் தமிழ் இலக்கியங்களின் வரலாறு பல நிலையில் பகுக்கப்பட்டு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. (சிவத்தம்பி, கா. **தமிழ் இலக்கிய வரலாறு**, பக் 375., 1998)

மன்னர்கள் தமிழ்நாட்டை ஆட்சிசெய்த வரலாற்றைச் சங்ககாலம், சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர்காலம், இருபதாம் நூற்றாண்டு என்றதொரு பகுப்புமுறையை வி. செல்வ நாயகம் செய்துள்ளார். (செல்வநாயகம், வி. **தமிழ் இலக்கிய வரலாறு**, பக் VII - VIII., 1960)

பழந்தமிழ் இலக்கியங்களுள் காலத்தினால் முந்தியவையாக சங்கஇலக்கியங்கள் குறிப் பிடப்படுகின்றன. இவற்றை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என மொத்தம் பதினெட்டு நூல்களாகக் கொள்வார். இவற்றுடன் சங்கமருவிய காலத்தின் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களான பதினெட்டு நூல்களுமாக மொத்தம் முப்பத்தாறு பழந்தமிழ் நூல்களையும் ஆராய்ச்சி நூலகம் ஒன்றிலே ஒழுங்கமைத்தல் தொடர்பான ஆய்வாக இந்த ஆய்வு அமைகின்றது.

**3. ஆய்வின் நோக்கங்கள்**

I) நூலக தகவல் சாதனங்களை ஒழுங்க மைக்கும் கருவிநூல்களாக உள்ள தூயிதசமப் பகுப்பு முறையும், ஆங்கில அமெரிக்கப் பட்டியலாக்க முறையும் சர்வதேச அங்கீகாரம் பெற்றவை ஆகும். கீழைத்தேய ஆக்கங்களை ஒழுங்கமைத்தல் தொடர்பில் உரிய கருவிநூல்கள் காணப்படவில்லை. இதனால் உலகப் பொதுவான முறைக்குள் நின்றே பிரதேச இலக்கியங்களும் ஒழுங்கமைக் கப்படுகின்றன. இவ்வாறான பிரயோக நிலையில் ஏற்படுகின்ற சவால்களை இனங் கண்டு விளக்குவது இவ் ஆய்வின் நோக்கமாக உள்ளது.

II. இனங்காணப்படும் சவால்களை அந்த வரையறைக்குள் நின்றே சீர்படுத்திக் கொள்ளக்கூடிய கருத்துக்களை முன்வைப் பதையும் இவ்வாய்வு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**4. ஆய்வு மூலங்கள்**

நூலகத் தகவல் சாதனங்களின் ஒழுங்கமைப் புடன் தொடர்புடைய இவ் ஆய்வானது கீழே குறிப்பிடும் ஆவணங்களை முதனிலைத்தரவுச் சாதனங்களாகப் பயன்படுத்துகின்றது.

I. தூயிதசமப் பகுப்பாக்கத்தின் இருபத்து மூன்றாவது பதிப்பு.

II. ஆங்கில அமெரிக்க பட்டியலாக்க விதிமுறையின் இரண்டாவது பதிப்பு

III. தமிழ்மொழியின் தொன்மை இலக்கியங்க ளாகக் குறிப்பிடப்படுகின்ற சங்ககால மற்றும் சங்கமருவியகால இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு மற்றும் பதிணெண் கீழ்க்கணக்கு நூல்கள் என மொத்தம் முப்பத்தாறு நூல்கள்.

IV. இவற்றுடன் இரண்டாம்நிலைத் தரவுச் சாதனங்களாக நூலகத்தகவல் ஒழுங்கமைப்புத் தொடர்பில் வெளிவந்த நூல்கள். பருவ இதழ்க் கட்டுரைகள் முதலானவை அமைகின்றன.

**5. ஆய்வு முறையியல்**

இவ் ஆய்விலே விளக்கவியல் ஆய்வு முறையியல், ஒப்பீட்டு ஆய்வு முறையியல் மதிப்பீட்டு ஆய்வுமுறையியல் போன்ற ஆய்வுமுறையியல்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. நூலகசாதனங்களின் ஒழுங்கமைப்பு விளக்கவியல் முறையிலே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பகுப்பு எண்களை ஒப்பீடு செய்தல், பழந்தமிழ் நூல்களின் பொருளடிப்படையிலான ஒப்பீடு போன்றவற்றிற்கு ஒப்பீட்டு ஆய்வுமுறையியல் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றின் அடிப்படையில் தகவல் ஒழுங்கமைப்புப் பற்றிய மதிப்பீடு இடம்பெறுகின்றது.

### 6. கருதுகோள்

சங்ககாலத்துப் பழந்தமிழ் இலக்கியங் களாகப் பதினெட்டு நூல்கள் உள்ளன. இவை பத்துப்பாட்டு எட்டுத்தொகை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இன்னொரு நிலையில் இவற்றைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று குறிப்பிடும் மரபும் உள்ளது. சங்கமருவியகால நூல்களாக மேலும் பதினெட்டு நூல்கள் உள்ளன. இவற்றைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வழங்கும் மரபு உண்டு. சங்க மற்றும் சங் கமருவிய காலங்களுக்குரிய நூல்களாக மொத்தம் முப்பத்தாறு நூல்களையும் தமிழ் இலக்கிய கவிதை நூல்களாகக் கருதி நூலக நூற்தட்டுக்களிலே ஒழுங்கமைத்து வைத்துக்கொள்ளும் தன்மை பொதுநிலையில் காணப்படுகின்றது. இந்த ஒழுங்கமைப்பிலே தூயிதசமப் பகுப்பாக்கத்தின் துணை அட்ட வணை (3- A) யிலிருக்கும் கவிதைக்குரிய உருவப்பிரிவினைப் பயன்படுத்துகின்றனர். கவிதை என்ற இலக்கிய வடிவத்திற்கான குறியீடு 1 ஆகும். இந்த முப்பத்தாறு நூல்களும் அவை கொண்டுள்ள பொருள் வேறுபாடு காட்டாமல் கவிதை என்ற உருவ ஒற்றுமை கருதி ஒரே நூற்தட்டுக்களிலேஒழுங்கமைக்கப்படுகின்றன. தமிழ் இலக்கியம் - கவிதை என்ற பொருளின் அடிப்படையில் முப்பத்தாறு மூலநூல்களும், கூடவே அவற்றின் மொழிபெயர்ப்பு நூல்களுமென ஒரேநூற்தட்டுக்களிலேநிறைத்து அடுக்கப்படுகின்றன. தமிழ் இலக்கியப் பெரும்பரப்பு ' கவிதை' என்ற வடிவத்தை மாத்திரமே ஆரம்பத்தில் கொண்டிருந்தது. நாடக வடிவம். இருக்கவில்லை புனைகதை என்பது மேனாட்டார் தமிழுக்கு அறிமுகப் படுத்திய வடிவம் உரைநடை கூட ஐரோப்பியர் காலத்தின் பின்னர்தான் தமிழ் இலக்கியத்துள் வருகின்றது. எனவே தமிழ் இலக்கியப் பெரும்பரப்பை 'கவிதை' என்ற குறியீட்டினால் வேறுபடுத்தி ஒழுங்கமைக்கும் போது பல நூல்கள் ஒரே வகையான குறியீட்டினைப்பெறுகின்றன. இதனால் பழந்தமிழ் நூல்களின் ஒழுங்கமைப்புத் தெளிவற்றுக் காணப்படுகின்றது. பா;ந்தமிழ் இலக்கியங்கள் சார்ந்து கருத்துள்ள ஒழுங்கமைப்பொன்றைத் தூயியின் துணை யுடன் உருவாக்கவேண்டிய இன்றியமையாமை நூலகவியலில் காணப்படுகின்றது. சங்க மற்றும் சங்கமருவிய காலத்தின் இந்த முப்பத்தாறு நூல்களையும் மரபு வழியான சொற்பதங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, மேற்கணக்கு நூல்கள், கீழ்க்கணக்கு நூல்கள் என ஒரிடப்படுத்தாமல் ஒவ்வொரு இலக்கிய நூலினதும் பொருளடிப்படையில் ஒழுங்க மைக்கும்போது சீரான கருத்துள்ள ஒழுங்கமை ப்பைப் பேணமுடியும் என்பது இவ் ஆய்வின் கருதுகோள் ஆகும்.

### 7. ஆய்வுப்பிரச்சினை

இவ் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள முப்பத்தாறு நூல்களும் பழந்தமிழ் இலக்கியங்களுள் முதன்மை பெறுவனவாகும். இந்த இலக்கிய நூற்றொகுதிகள் சார்ந்து நூலின் பொருள் சார்ந்த வரிசைப்படுத்தலை வலியுறுத்தும் தூயியின் பகுப்பு முறையைப் பிரயோகிக்கும் போது பதினான்கு நூல் கள் தமிழ் இலக்கியம் - கவிதை என்ற பொருட்துறையிலிருந்து பிறதுறைகளுடன் ஒழுங்கமைக்கப்பட வேண்டியனவாக உள்ளன. இவை இந்துசமயம், ஒழுக்கவியல், நாட்டாரியல் போன்ற பாடத்துறைக்குள் வரிசைப்படுத்த வேண்டியனவாக உள்ளன. இந்நிலையில் இந்த இலக்கிய நூல்களின் பொருள் கருதாமல் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை அல்லது பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்ற சொற்பதங்களின் கீழ் ஒரே தொகுதியாக கோவைப்படுத்துவதனால் பொருத்தமான பொருள் சார்ந்த பகுப்பு முறையை நூலகத்தில் ஏற்படுத்த முடியாது என்பது இவ் ஆய்வின் பிரச்சினை மையமாகும்.

**8. தரவுப்பகுப்பாய்வும் திறனாய்வும்**

தூயிதசமப் பகுப்புமுறை உலக அறிவுத் தொகுதியைப் பத்துப் பெரும் பிரிவுகளாகப் பகுத்துள்ளது.

000 - பொது

100 - தத்துவம்

200 - சமயம்

300 - சமூகஅறிவியல்

400 - மொழி

500 - அறிவியல்

600 - தொழில்நுட்பம்

700 - கலை

800 - இலக்கியம்

900 - வரலாறு மற்றும் புவியியல்

இவற்றுள் 800 என்ற குறியீடு இலக்கியம் என்ற துறைக்குரியதாகிறது. 800 - 899 வரையான அரபு எண்களைக் குறியீடுகளாகக் கொண்டு உலக இலக்கியங்கள் யாவற்றையும் நூலகங்களிலே ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர்.

பொது நிலையில் நோக்கின் இலக்கியங்களுக்கான குறியீடுகள் அவையெழுந்த மொழிகளினடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் வரிசை ஒழுங்கிலேயே உலகில் எழுந்த இலக்கியங்கள் யாவும் ஒழுங்கமைக்கப்பட வேண்டுமென தூயியின் பகுப்புமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.

800 - இலக்கியம் - (பிரதம வகுப்பு)

810 - அமெரிக்க இலக்கியம்

820 - ஆங்கில இலக்கியம்

830 - ஜெர்மனிய இலக்கியம்

840 - பிரெஞ்சு இலக்கியம்

850 - இத்தாலிய இலக்கியம்

860 - ஸ்பானிய இலக்கியம்

870 - இலத்தீன் இலக்கியம்

880 - கிரேக்க இலக்கியம்

890 - ஏனைய இலக்கியங்கள்

என்றவாறு இப்பகுப்பு முறை அமைந்துள்ளது. இவற்றுள் ஏனைய இலக்கியங்கள் (890) என்ற பிரதம வகுப்பின்கீழ் திராவிடமொழிக் குடும்ப இலக்கியங்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. இதன்படி,

891 - கிழக்கு இந்தோ ஐரோப்பிய செல்டிக் மொழிகளில் எழுந்த இலக்கியங்கள்

894.8 - திராவிட இலக்கியங்கள்

894.81 - தென் திராவிட இலக்கியங்கள்

894.811 - தமிழ்மொழி இலக்கியங்கள்.

## 9. இலக்கிய உருவ வேறுபாட்டுக் குறியீடுகள்:

பிரதம வகுப்புடன் உருவப்பிரிவுகளின் குறியீடுகளை இணைத்துக் கொள்வதனூடாக குறிப்பிட்ட அந்தந்த இலக்கிய நூல்களுக்கான பகுப்பு எண்ணைக் கட்டியெழுப்பமுடியும் எனத் தூயிதசமப் பகுப்பாக்கம் குறிப்பிடுகின்றது.

அட்டவணை - 1: தூயி அட்டவணை (3 - A ) இலிருந்து இலக்கிய உருவப் பிரிவுகளின் பாவனை முறையும் எண்கட்டுமானமும் பற்றிய விளக்க அட்டவணை.

| நூலின் பொருள் | இலக்கிய எண் | அடிஎண் | இலக்கிய உருவப் பிரிவுகளின் நியம வடிவம் | பகுப்பு எண் |
|---|---|---|---|---|
| ஆங்கில நாடகம் | 820 | 82 | (நாடகம்) 2 | 822 |
| சிங்களக் கவிதை | 891.48 | 891.48 | (கவிதை) 1 | 891.481 |
| தமிழ்ப் புனைகதை | 894.811 | 894.811 | (புனைகதை) 3 | 894.8113 |
| சமஸ்குதக் கடிதங்கள் | 891.2 | 891.2 | (கடிதம்) 4 | 891.24 |
| தமிழ்ச் சொற் பொழிவுகள் | 894.811 | 894.811 | (உரைகள்) 5 | 894.8115 |

இந்த உருவப் பிரிவுகளுள் கவிதைக்கான உருவப்பிரிவாக குறியீடு 1 உள்ளது. பழந்தமிழ் இலக்கியங்கள் முழுமையும் செய்யுள் வடிவிலேயே காணப்படுகின்றன. அவை தனிநிலைச் செய்யுள் என்ற வகையில் உள்ளன. சங்ககாலம் மற்றும் சங்கமருவிய கால இலக்கியங்கள் பெரும்பாலும் தனிநிலைச் செய்யுள் மரபிலமைந்தவை. தூயியின் விதிமுறைக்கமைய பழந்தமிழ் இலக்கியங்களைப் பகுப்பாக்கம் செய்யும் கவிதை என்ற உருவப்பிரிவு மட்டுமே பயன்படுகின்றது. பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்ற முப்பத்தாறு நூல்களும் 894.81111 என்ற ஒரே குறியீட்டையே பெறுகின்றன. இதனால் ஒரே குறியீட்டின் கீழ் அதிக நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. பல நபர்களைக் கொண்ட குழுமம் ஒன்றில் ஒரு பெயரால் பல நபர்களை அழைப்பது போன்ற குழப்பமான தன்மையுடையதாக இந்த எண்கட்டுமானம் உள்ளது.

இதனால் நூல்களை நுண்ணிய முறையில் வேறுபடுத்திக்கொள்ள முடியாதுள்ளது. தமிழில் புனைகதை என்னும் வடிவம் ஏறத்தாழ பதினெட்டாம் நூற்றாண்டின் பின்னரே அறிமுகமாகியது. ஆங்கில இலக்கியம் - கவிதை (821) அல்லது ஆங்கில இலக்கியம் - நாடகம் (822) என்பது போல பழந்தமிழ் இலக்கியங்களை இந்த உருவப்பிரிவுகளைப் பயன்படுத்திப் பெருமளவில் வேறுபடுத்திக்கொள்ள முடியாதுள்ளது. சேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களை பொருளடிப்படையில் துன்பியல்நாடகம் மற்றும் இன்பியல்நாடகம் என்று பகுத்துரைக்கும் முறை ($DDC_{23}$ Vol

III Pg. 802,803) போன்று தமிழின் ஆரம்ப இலக்கியங்களின் பகுப்பு முறையில் தூயியின் தசமப் பகுப்பு முறையை நேரடியாகப் பிரயோகிக்க முடியாதுள்ளது. ஏனெனில் தமிழ் இலக்கியத்தின் உருவப் பிரிவுகள் வேறுவகையானவை. தமிழில் மொத்தம் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உள்ளன. தமிழ்க் கவிதை இலக்கியங்களை வகைப்படுத்தலில் பிரபந்தங்களுக்கான குறியீடு வழங்குவதன் மூலம் பழந்தமிழ் இலக்கியங்களுக்கான கருத்துள்ள நுண்ணிய பகுப்பாக்கம் ஒன்றை மேற்கொள்ள முடியும். இது விரிவான ஆய்வுக்குரியது. தமிழ்க் கவிதை என்ற உருவப்பிரிவினை மாத்திரம் பயன்படுத்திக்கொண்டுசங்ககாலம் தொடக்கம் நவீன காலம் வரை அதாவது சங்ககால கபிலர் பரணரின் செய்யுள்கள் முதல் நவீனகால பாரதியார்கவிதை வரை1 என்ற குறியீட்டினால் மட்டும் வேறுபடுத்துவது பழந்தமிழ் நூல்களின் ஒழுங்கமைப்பில் தெளிவற்ற நிலையை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் தமிழ் இலக்கியப் பெரும் பரப்பு 'கவிதை' என்ற வடிவத்தினால் மட்டுமே உருவாகிக் காணப்படுகிறது. சங்கச் செந்நெறிஇலக்கியங்களுள் நாடக வடிவம் இல்லை. புனைகதை என்பது மேனாட்டார் மரபினூடாகத் தமிழுக்கு வந்த நவீன வடிவம். கட்டுரை வடிவம் உரைநடைக்காலத்தின் பின்னர் ஏற்பட்டது. எனவே தமிழ் இலக்கியப் பெரும்பரப்பைப் பகுக்கக்கூடிய உருவப்பிரிவுகளடங்கிய வழிமுறை ஒன்று அவசியமாகத் தேவைப்படுகின்றது. இதுவும் விரிவான ஆய்வுக்குரியது.

**10. பிரதேச இலக்கியங்களுக்கான முதன்மை**

தூயிதசமப் பகுப்பாக்கத் திட்டத்தின் 16 வது பதிப்பு வரையும் பிரதேச ரீதியாக வெளியான நூல்களை ஒழுங்கமைத்துக் கொள்வது தொடர்பாக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. 1 8 வது பதிப்பிலிருந்து இது சார்ந்து ஒரு நெகிழ்ச்சியான போக்குக் காணப்படுகின்றது. ஆங்கிலமொழியிலமைந்த இலக்கியங்களை ஒழுங்கமைக்கும் போது அமெரிக்க பிரதேசத்திற்கு முதன்மை வழங்கும் நோக்கில் அமெரிக்க இலக்கியங்களை 810 என்ற குறியீட்டில் தனியாக வகைப்படுத்துமாறு தூயிதசமப் பகுப்புத்திட்டம் அறிவுறுத்தியுள்ளது. தவிர ஆங்கில மொழியிலமைந்த மற்றைய எல்லாப் பிரதேச இலக்கியங்களும் 820 என்பதனுள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. பிரதேசமுன்னுரிமை வழங்கி இலக்கியங்களை ஒழுங்கமைக்க விரும்பும் நூலகங்கள் 810 என்ற குறியீட்டைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ($DDC_{23}$ Vol. III Pg. 794) பிரதேச இலக்கியங்களுக்கு முதன்மை வழங்குதல் என்ற அடிப்படையில் அமெரிக்க இலக்கியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அடிப்படை எண்ணாகிய 810 என்ற குறியீட்டை தமிழ் இலக்கியங்களுக்கு மாற்றிப் பிரயோகிக்க முடியும். இது பல நிலைகளில் இலக்கிய நூல்களை ஒழுங்கமைத்தலிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதாக இருக்கும் என்பது இத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் வலியுறுத்தும் கருத்தாக உள்ளது. (ஸ்ரீ காந்தலட்சுமி, அருளானந்தம். **நூலகத் தகவல் அறிவியல் ஆய்வுக்கோவை,** பக் 238 - 240, 2008)

இத்தகைய மாற்றத்தை உள்வாங்கி எண்கட்டுமானத்தை மேற்கொள்ளும்போது இலகுவில் நினைவில் வைத்திருக்கக்கூடிய சுருக்கமான குறியீடுகளை உருவாக்கிக்கொள்ள வாய்ப்பு உண்டு. அதேவேளை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை மற்றும் பதினெண் கீழ்க்கணக்கு என்ற வகைப்பாட்டிலுள்ள முப்பத்தாறு நூல்களிலும் அகத்திணை நூல்கள், புறத்திணை நூல்கள் இரண்டையும் இலக்கியம் என்ற பிரதம வகுப்பின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்ளும் அதே நேரம் நீதிநூல்களாக உள்ளவற்றை நீதிநூல் திரட்டுக்களுக்கான 170 குறியீட்டில் வரிசைப்படுத்துவதே பொருத்தமானது.

## 11. சங்க இலக்கியங்களை ஒழுங்கமைத்தல்

சங்க இலக்கியங்கள் தொடர்பில் பல்வேறு வகைப்பாடுகள் உள்ளன. தமிழ்க் கவிதைக் கொள்கையினடிப்படையிலே அகத்திணை, புறத்திணை என்ற பொருட் பாகுபாட்டினை தொல்காப்பியம் பொருளதிகாரம் குறிப்பிடுகின்றது. இன்னொரு நிலையில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்னும் வகைப்பாடு காணப்படுகின்றது. இங்கு பத்துப்பாட்டு என்பது பத்துத் தனித்தனி நூல்களின் தொகுப்பாகும். நீண்ட நெடும் பாட்டுக்களின் தொகுப்பாக இது உள்ளது. கி.பி 14 ஆம் நூற்றாண்டில் நன்னூலுக்கு உரை வகுத்த மயிலைநாதர், நன்னூல் நூற்பா 387 இன் உரையில் "பத்துப்பாட்டு" என்று முதன்முதலாகக் குறிப்பிட்டுள்ளார். (முத்துராசன், கு.**சங்ககாலம்** பக் 184) இவ்வாறே எட்டுத் தொகையிலுள்ள ஒவ்வொரு நூலும் வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்டனவாகக் கொள்ளப்படும் வேறுவேறான எட்டு நூல்களின் தொகுதி ஆகும். சங்க இலக்கியப் பாடல்களைக் குறிக்கும் வகையிலமைந்த இச் சொற்றொடர்களைக் கையாளும் முறை கி.பி 11 ஆம் நூற்றாண்டின் பின்னர்தான் ஏற்பட்டது என்பது இத்துறைசார் புலமையாளர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தக உள்ளது. (சிவத்தம்பி, கா. **தமிழில் இலக்கிய வரலாறு**, பக் 58, 1998). எட்டுத்தொகையையும் பத்துப்பாட்டையும் சேர்த்து பதினெண் மேற்க்கணக்கு நூல்கள் எனக் குறப்பிடும் மரபும் உள்ளது. (சுப்பிரமணிய அய்யர். ஏ.வி, **தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி**, பக். 82, 1959). பதினெண் மேற்கணக்கு நூல்களாக சங்க இலக்கியங்களையும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாக சங்கமருவிய காலத்தின் பதினெட்டு நூல்களையும் குறிப்பிட்டு வகைப்படுத்தும் மரபும் இத்துறை சார்ந்து காணப்படுகின்றது. சங்க மற்றும் சங்கமருவிய காலத்தனவாகக் கூறப்படுகின்ற மொத்தம் முப்பத்தியாறு நூல்களின் உட்பொருள் பின்வரும் வகையில் அமைந்து காணப்படுகின்றன.

### 11.1. பத்துப்பாட்டு நூல்களும் அவற்றின் உட்பொருளும்

நெடும் பாட்டுக்கள் பத்தினைக்கொண்ட தனித்தனி பத்துக் கவிதை நூல்கள் பத்துப் பாட்டெனப்படுகின்றன. பத்துப்பாட்டிலுள்ள பாக்கள் யாவும் நூறு அடிக்கு மேற்பட்டவை. இந் நூல்கள் யாவும் தாம் கூறுவதற்கு எடுத்துக்கொண்ட பொருளை வேண்டிய அளவிற்கு விரிவாகத் திறம்படப் பாடியுள்ள தன்மையைக் கொண்டுள்ளன. இவற்றின் பாடுபொருட்கள் அகத்திணை, புறத்திணை மற்றும் சமயம் என்பன சார்ந்துள்ளன.

சங்ககாலப் பாடல்களைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் 'அகத்திணை,' 'புறத்திணை' என வகையீடு செய்துள்ளது. அகத்திணைப் பாடல்களில் வரும் மாந்தர்களைத் தலைவன், தலைவி, தோழி எனப் பொதுவாகக் குறிப்பிடுவதன்றி அவர்களுக்குப் பெயர் குறிக்கப் பெறுவதில்லை எனத் தொல்காப்பிம் குறிப்பிடுகின்றது.

" மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்"
(தொல்: பொருள்: சூத்:57)

எனும் சூத்திரத்தால் இது விளங்க வைக்கப்படுகின்றது. அதாவது மக்களைப் பொதுவாகக் கருதிப் பாடப்பெறும் அகத்திணைப் பாடல்களில் பாடல் மாந்தரின் இயற்பெயரைச் சுட்டிக் கூறுவது இல்லை. பெயர் மட்டுமன்றி குடிப்பெயர், ஊர் முதலியனவும் கூடச் சுட்டப்படுவது இல்லை. இவற்றுள் ஏதேனும் ஒன்றினையேனும் குறிப்பிட்டாலும் அவை புறத்திணையின் பாற்படும் என்றே தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் விளக்கப்படுகின்றது. எனவே அகத்திணை, புறத்திணை என்பது பழந்தமிழ் இலக்கியங்களின் பொருள

டிப்படையிலான ஒரு வகைப்பாடாகக் காணப்படுகின்றது. இதில் குழப்பமற்ற தெளிவான வரையறை காணப்படுவதால் பழந்தமிழ் இலக்கியங்களின் ஒழுங்கமைப்பில் அகத்திணை மற்றும் புறத்திணைப் பாடல்கள் தனித்தனியான பொருட்துறைகளாகக் கருதி ஒழுங்கமைக்கப்படுவதே பொருத்தமானது.

**11.1.1. பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படை**

பத்துப்பாட்டினுள் முதல் நூலாகத் திருமுருகாற்றுப்படை உள்ளது. இந்நூல் 'புலவராற்றுப்படை' எனவும் 'திருமுருகு' எனவும் வெவ்வேறு தலைப்புக்களாலும் வழங்கப்பெறுகின்றது. இது முந்நூற்றுப் பதினேழு (317) அடிகளில் காணப்படுகின்றது. இது முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் இடங்களாக இந்துசமயத்தவர் கூறும் ஆறுபடை வீடுகள் பற்றிய ஆறு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. முருகனிடம் ஆன்மீக அருள் வேண்டி நிற்கும் புலவனை ஆற்றுப்படுத்துவதாக இதன் அமைப்புக் காணப்படுகிறது. இந் நூல் இந்து சமயத்தின் அறுவகைச் சமய நெறிகளுள் ஒன்றாகிய கௌமாரம் என்ற பொருட்துறைக்குள் ஒழுங்கமைக்கப்படுவதே பொருத்தமானது. எனினும் ஆற்றுப்படை என்கின்ற இலக்கிய வடிவத்தினூடாக வெளிப்படும் ஒரு புறத்திணைக் கவிதை நூலாகக் கருதப்பட்டு தமிழ் இலக்கியம் என்ற பிரதம வகுப்பின் கீழ் உள்ள நூல்தட்டுக்களிலே ஒழுங்கமைக்கும் முறையே பிரதேச நூலகங்களிலே நடைமுறை யிலுள்ளது.

நூலகங்களிலே திருமுருகாற்றுப்படையின் இட அமைவு சார்ந்து மேலுமொரு தெளிவற்ற நிலையும் காணப்படுகின்றது. திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். திருமுருகாற்றுப்படை முருகவழிபாட்டுக்குரிய தோத்திர நூலாகக் காணப்படுகின்றமையால் பதினோராந் திருமுறையுள் தொகுக்கப்பட்ட பிரபந்தங்களுள் ஒன்றாகத் திருமுருகாற்றுப்படையும் சேர்க் கப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப்படை எழுந்த காலம் சார்ந்தும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. சங்ககாலத்திற்குப்பின் எழுதிய நூலாக விளங்கும் நோக்கில் இது பத்துப்பாட்டின் முதல் நூலாக அமைக்கப்பட்டிருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுவர். (சிறிஸ்கந்தராசா.,இ. **54 பழந்தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள சிறப்புத் தகவல்கள்**, பக்,53 - 54.2008) திருமுருகாற்றுப்படை ஒரு இந்து சமய நூல் என்பதில் கருத்தொற்றுமை காணப்படுகின்ற நிலையில் இந்நூலை 'தமிழ்' இலக்கியம்-கவிதை' என்ற பொருட்துறையின் கீழ் ஒழுங்கமைக்காமல் 'இந்துசமயம்' என்ற பிரதம வகுப்பின் கீழ் ஒழுங்கமைப்பதே பொருத் தமானது.

அட்டவணை - 1 : பத்துப்பாட்டு நூல்களின் உட்பொருளும் இவற்றிற்குப் பிரதேச முதன்மை வழங்குதல் என்ற கருத்து நிலைப்படி தூயி தசமப்பகுப்பின் குறியீட்டினையும் கொண்ட விளக்க அட்டவணை.

| நூலின் பெயர் | உட்பொருள் | ஏனைய இலக்கியங்கள் என்ற நிலையில் வழங்கப்படும் குறியீடுகள் | பிரதேச முதன்மை அடிப்படையில் வழங்கப்படக்கூடிய குறியீடுகள் |
|---|---|---|---|
| திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை) | இந்துசமயம் முருக வழிபாடு | 894.8111 | 294.95 |
| பொருநராற்றுப்படை | தமிழ் இலக்கியம் - கவிதை (புறத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| சிறுபாணாற்றுப்படை | தமிழ் இலக்கியம் - கவிதை (புறத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| பெரும்பாணாற்றுப்படை | தமிழ் இலக்கியம் - கவிதை (புறத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| முல்லைப்பாட்டு | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| மதுரைக்காஞ்சி | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| நெடுநல்வாடை | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| குறிஞ்சிப்பாட்டு | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| பட்டினப்பாலை | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) | தமிழ் இலக்கியம் - கவிதை (புறத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |

**11.2. எட்டுத்தொகை நூல்களும் அவற்றின் உட்பொருளும்.**

எட்டுநூல்களின் தொகுப்பு 'எட்டுத்தொகை' எனப்படுகின்றது. இந் நூல்களின் பாடல்கள் அமைந்துள்ள அடிகளின் அளவு, கூறும் பொருள், மற்றும் எழுதப்பட்ட யாப்பு போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட நூல்களாக இவையுள்ளன. இத் தொகுப்பில் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டு நூல்களும் புறத்திணை என்னும் பொருள் சார்ந்தவை ஆகும். பரிபாடல் தவிர்ந்த அகநாநூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பன அகத்திணை என்னும் பொருள் சார்ந்தவை ஆகும்.

**11.2.1. எட்டுத்தொகையுள் பரிபாடல்**

எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல் ஐந்தாவது நூலாக உள்ளது. பரிபாடல் தொகுப்பில் உள்ள பாடல்களில் எண்ணிக்கை எழுபது ஆகும். அதில் தற்போது கிடைப்பவை இருபத்திரண்டு பாடல்கள். இவற்றுள் திருமால் மீது ஆறு பாடல்களும், முருகன் மீது எட்டுப் பாடல்களும், வைகை ஆற்றின் மீது எட்டுப் பாடல்களுமாக இவை காணப்படுகின்றன.

திருமாலைப் பற்றிய பாடல்கள் திருமாலின் உருவ அழகையும், திருமால் எடுத்த அவதாரச் செயல்களையும் விவரிக்கின்றன. திருமாலே முழுமுதற் கடவுள் என்றும் மும்மூர்த்திகளும் அவருள் அடக்கம் என்றும் இப் பாடல்கள் கூறுகின்றன. முருகனைப் பற்றிய பாடல்கள் முருகனது சிறப்பையும், சூரனை வென்று வள்ளியை மணம் முடித்தமையையும் விபரிக்கின்றன.

வைகை பற்றிய பாடல்கள் மார்கழி மாத நீராடல் பற்றிக் கூறுகின்றன. மார்கழி நீராடல், அம்பா ஆடல் போன்ற இந்நூலின் செய்திகள் பிற்காலத்தில் திருவெம்பாவை நோன்புடன் தொடர்புடையதாகக் கூறப்படுகின்றது. மேலும் இந்நூலின் புராண வரலாறுகள் பலவும், வேதக் கருத்துக்கள் சிலவும் காணப்படுகின்றன. எனவே இதனைக் கடவுள் நூலாகக் கருதவேண்டுமென்ற கருத்துக் காணப்படுகின்றது. (முத்துராசன், கு. **சங்ககாலம்**, பக் 171 - 172, 1985) பரிபாடலில் காடுகிழாள் என்னும் பெண் தெய்வத்துக்குரிய பாடல்களும் இருந்தமை பற்றி அறியப்படுகின்றது. (கந்தையாபிள்ளை, ந. சி **கலித்தொகை பரிபாடல்,** பக் V, 2003) தொல்காப்பியரது பொருட் கோட்பாட்டின்படி கடவுளர்களின் பெயர் குறிப்பிட்ட பாடல்களின் தொகுதியாக உள்ள பரிபாடல் புறத்திணைக்குரியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது இந்துசமயக் கடவுளார் சார்ந்தது ஆகும். அகத்திணை, புறத்திணை என்ற பொருளடிப்படையிலான வகையீட்டிற்கும் மேலதிகமாக சமயம் சார்ந்த வகைப்படுத்தல் சங்கச் செய்யுட்களைத் தொகுக்கும்போது காணப்படாமையால் எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவது தொகை நூலாப் பரிபாடல் புறத்திணைக்குள் வகைப்படுத்தப்பட்டிருக்கலாம். எனக் கருத இடமுண்டு.

பரிபாடல் கொண்டுள்ள பாடல்கள் குறிப்பிடும் பொருளைநோக்கும்போது இந்நூல் தூயி தசமப் பகுப்பின் இந்துசமயம் என்ற பிரதம வகுப்பின் கீழேயே ஒழுங்கமைக்கப்பட வேண்டியதாக உள்ளது.

அட்டவணை - 2 : எட்டுத்தொகை நூல்களின் உட்பொருளும் இவற்றிற்குப் பிரதேச முதன்மை வழங்குதல் என்ற கருத்து நிலைப்படி தூயி தசமப் பகுப்பின் குறியீட்டினையும் கொண்ட விளக்க அட்டவணை.

| நூலின் பெயர் | உட்பொருள் | ஏனைய இலக்கியங்கள் என்ற நிலையில் வழங்கப்படும் குறியீடுகள் | பிரதேச முதன்மை அடிப்படையில் வழங்கப்படக்கூடிய குறியீடுகள் |
|---|---|---|---|
| நற்றிணை | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| குறுந்தொகை | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| ஐங்குறுநூறு | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| பதிற்றுப்பத்து | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| பரிபாடல் | இந்துசமயம் | 894.8111 | 294.95 |
| கலித்தொகை | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| அகநானூறு | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |
| புறநானூறு | தமிழ் இலக்கியம் - கவிதை (புறத்திணைக் கவிதை நூல்) | 894.8111 | 811 |

**12. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.**

கீழ்க்கணக்கு நூல்களுக்கான வரைவிலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூல் பின்வருமாறு கூறுகின்றது.

"அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்."

இரண்டடி முதல் ஆறடி ஈறாக உள்ள வெண்பாவிலேனும் அல்லது வெண்பாவின் வகையினாலேனும் அமைந்திருப்பது. அறம், பொருள், இன்பம் என்பன பற்றிக் கூறுவது கீழ்க்கணக்கு நூல்கள் என இதன் விளக்கம் அமைகின்றது. இதன்படி கீழ்க்கணக்கு என்ற பகுப்பு முறைக்குள் பாடல்கள் கொண்டுள்ள வரிகளின் அளவும் பாடல் அமைந்துள்ள யாப்பமைதியும் முதன்மை பெறுவதை அவதானிக்க முடிகின்றது. அகத்திணை, புறத்திணை, நீதிக்கருத்துக்கள், சமூக ஒழுங்கு என்பன போன்ற பல்வேறு பொருட்துறைகளுள் அமைந்த நூல்கள் ஒரே தலையங்கத்தின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டுள்ளும் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றை ம்பது, கார் நாற்பது, கைந்நிலை என்னும் ஆறு நூல்களும் அகத்திணைக் கவிதை நூல்களாகும். களவழி நாற்பது என்னும் நூல் போர்க்களம் ஒன்றைச் சித்திரித்துக் காட்டும் புறத்திணை நூலாகும். சமூகநீதி, அறம் நிலையாமை, துறவு என்ற ஒழுக்கவியல் சார்ந்த நூல்களாக நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை, ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், திருக்குறள் போன்றன காணப்படுகின்றன.

**12.1 கீழ்க்கணக்கு தொகுப்பிலுள்ள நீதிநூல்கள்**

நீதிநூல்களுள் காலத்தால் முற்பட்டது திருக்குறள். நீதிநூல் திரட்டுக்களில் தலையாயது. இது அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதிக மாணவர்களால் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது. சிறந்த இலக்கியம் என்பதைவிட மக்களுக்கு ஒழுக் கத்தை அறிவுறுத்தத் தோன்றிய அறநூலாகக் கொள்வதே பொருத்தமானது. ஆங்கிலம் முதலான பிறமொழிகளின் அனுபவப்படி நீதிநூல்களை இலக்கியமாகக் கொள்ளும் மரபு இல்லையென்பர் வி. செல்வநாயகம் **(செல்வநாயகம், வி. தமிழ் இலக்கிய வரலாறு, பக் 55. 1966)**

திருக்குறள் சார்ந்த மூலநூல், மொழி பெயர்ப்பு நூல்கள், திருக்குறள் பற்றிய திறனாய்வு நூல்கள் மற்றும் பல்வேறு உரைநூல் களென ஏனைய நூல்களுடன் ஒப்பீடு செய்யும் போது அதிகளவு நூல்கள் நூலகத்திலே சேகரிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே நீதி நூல் என்ற அடிப்படையில் 'ஒழுக்கவியல்' என்ற பாடத்துறைக்குள் வரிசைப்படுத்திய பின்னர், நூலகம் பொருத்தமான சீரமைவுத் தலையங்கத்தைத் தெரிவு செய்து அந்தந்தத் தலையங்கத்தின் கீழ் திருக்குறள் சார்ந்த எல்லா நூல்களையும் ஒழுங்கமைத்துக் கொள்ளலாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கு அடுத்தப்படியாக நீதியுநீதி யுரைப்பது நாலடியார் ஆகும். இந்நூல் வெண்பாவினால் பாடப் பட்ட நானூறு பாடல்களைக் கொண் டுள்ளது. நான்மணிக்கடிகையில் பாடல் தோறும் நான்கு அறக்கருத்துக்கள் வலியுறுத் தப்படு வதால் நான்மணிக்கடிகை என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. நாற்பது வெண்பாக் களைக்கொண்ட 'இனியவை நாற்பது' என்னும் நூலில் நீதிக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மருந்துப் பண்டங்கள் ஆகும். இம் மூன்றும் அமைந்த மருந்தை உண்பதால் உடல் வருத்தம் நீங்கும். இதுபோல ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று கருத்துக்கள் விதம் மொத்தம் நூற்றொரு 101 பாடல்களில் சமூக ஒழுங்கு வலியுறுத்தப்படுகின்றது. மனதிலே நீதியை விதைத்து மனமருத்துவம் செய்யும் நூலாக இது அமைந்துள்ளது. ஆசாரக்கோவை நூறு பாடல்களைக் கொண் டது. ஒருவர் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்க முறைகளை இந்நூல் தொகுத்துக் கூறுகின்றது.

சிறுபஞ்சமூலம் என்பது கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி எனும் ஐந்து மூலிகைத் தாவர வேர்களைக் குறிக்கும் சொல் ஆகும். இந்த ஐந்து வேர்களைக் கொண்ட மருந்து உடற்பிணியை நீக்குவது போல பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து நீதிகளைக்கூறி மனப்பிணியைப் போக்கும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது. ஏலாதி மருந்தில் ஆறு சரக்குகள் அமைந்திருப்பது போல ஒவ்வொரு ஏலாதிப் பாடல்களிலும் மனித வாழ்வை வளப்படுத்தும் ஆறு நீதிக்கருத்துக்கள் கூறப்படுகின்றன.

நூல் கொண்டுள்ள பொருளை அடிப்படையாகக் கொண்டே அவற்றை ஒழுங் கமைத்துக் கொள்ள வேண்டுமென்றதூயி தசமப் பகுப்புத் திட்டத்தின் கோட்பாட்டிற்கமைய பதினெண் கீழ்க்கணக் கின் நீதிநூல்கள்

யாவும் ஒழுக்கவியல் என்ற பாடத்துறைக்குள் வரிசைப்படுத்துவதே பொருத்தமானது.

**12.1.1 கீழ்க்கணக்கு நூல்களில் பழமொழி நானூறு**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினான்காவது நூலாகப் பழமொழிநானூறு உள்ளது. பழமொழிகள் ஒவ்வொன்றை ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் அமைத்துப் பாடப்பட்ட நாநூறு பாடல்களின் தொகுப்பாகப் பழமொழி நாநூறு என்னும்நூல் அமைந்துள்ளது. பழமொழிகளை உள்ளடக்கிய பல நூல்கள் தற்போது வெளிவந்திருந்தாலும் இந்நூலை மிகத் தொன்மையான பழமொழித் தொகுப்பு நூலாகக் கருதுவர். (சிறிஸ்கந்தராசா, இ. 54 பா;ந்தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள சிறப்புத் தகவல்கள். பக் 83 - 84, 2008.)

பழமொழித் தொகுப்புக்களை தூயி தசமப் பகுப்பாக்கம் நாட்டாரியல் (398.9) என்ற பாடத்துறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்ளுமாறு வழிப்படுத்துகின்றது. பழமொழிகளின்தொகுப்பாகஉள்ளபழமொழி நானூறு என்னும் நூலை நாட்டாரியல் சார்ந்த நூல்களுடன் ஒழுங்கமைப்பதே பொருத்தமானது.

**12.1.2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் ஒழுங்கமைப்பு**

*அட்டவணை - 3 : பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் உட்பொருளும் அவை நூலகத்திலே ஒழுங்கமைக்கப்பட வேண்டிய முறையும் பற்றிய விளக்க அட்டவணை.*

| நூலின் பெயர் | உட்பொருள் | பகுப்பு எண் |
|---|---|---|
| நாலடியார் | ஒழுக்கவியல் | 170 |
| நான்மணிக்கடிகை | ஒழுக்கவியல் | 170 |
| இன்னாநாற்பது | ஒழுக்கவியல் | 170 |
| இனியவை நாற்பது | ஒழுக்கவியல் | 170 |
| கார்நாற்பது | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |
| களவழிநாற்பது | தமிழ் இலக்கியம் - கவிதை (புறத்திணைக் கவிதை நூல்) | 811 |
| ஐந்திணை ஐம்பது | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |
| ஐந்திணை எழுபது | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |

| | | |
|---|---|---|
| ஐந்திணை எழுபது | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |
| திணைமொழி ஐம்பது | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |
| திணைமாலை நூற்றைம்பது | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |
| திருக்குறள் | ஒழுக்கவியல் | 170 |
| திரிகடுகம் | ஒழுக்கவியல் | 170 |
| ஆசாரக்கோவை | ஒழுக்கவியல் | 170 |
| பழமொழி நானூறு | நாட்டாரியல் - பழமொழிகள் | 398.9 |
| சிறுபஞ்சமூலம் | ஒழுக்கவியல் | 170 |
| முதுமொழிக்காஞ்சி | ஒழுக்கவியல் | 170 |
| ஏலாதி | ஒழுக்கவியல் | 170 |
| கைந்நிலை | தமிழ் இலக்கியம் - கவிதை (அகத்திணைக் கவிதை நூல்) | 811 |

**13. ஆய்வுமுடிவும் பரிந்துரைகளும்**

ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முப்பத்தாறு பழந்தமிழ் நூல்களைப் பகுப்பாய்வு செய்து கொண்டதற்கமைவாகப் பின்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன.

இந்நூல்கள் அவை அமைந்துள்ள அடியளவு, பாடப்பட்ட பாவகை, அவை கூறும் பொருள் என்ற அடிப்படைகளில் மிக நுணுக்கமான பகுப்புமுறையைக் கொண்டமைந்துள்ள தொகுப்பு நூல்களாக உள்ளன. இந்நூல்களின் தொகுப்பு முயற்சியின் போது அகத்திணை புறத்திணை மற்றும் நீதிநூல்கள் என்ற பொருட்பகுப்பு முறை நன்கு தெளிவான முறையில் இடம்பெற்றுள்ளது. உலகியல் மாந்தரோ அல்லது ஆன்மீக ரீதியில் கடவுளோ இன்னாரென்று அவரது முழுவிபரமும் பாடல்களில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படும் போது அது புறத்திணை பொருளுரைப்பது என்று சங்கப்பாடல்களைத் தொகுத்தவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அகம், புறம் என்பதற்கும் மேலதிகமாக சமயம் என்ற பகுப்பு முறை அப்பாடல்களைத் தொகுக்கும் போது இடம்பெறவில்லை. இதனால் சமயமும் 'புறம்' என்ற பொருளுடையது என்று கருதப்பட்டுள்ளது. இந்நிலையில் தூயி தசமப் பகுப்புமுறை பிரயோகிக்கப்படுமிடத்து பத்துப்பாட்டு நூல்கள் அகத்திணை, புறத்திணை, சமயம், ஒழுக்கவியல் என்ற பொருள் சார்ந்து பகுக்கப்பட வேண்டியனவாக உள்ளன.

நூல்கூறும் பொருளுக்கு முதன்மை தரும் தூயியின் பகுப்புமுறைப்படியான ஒழுங்கமைப்பை வலியுறுத்துகின்றது.

ஆனால் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என ஒரே தொகுதியாக நூற்தட்டுக்களிலே வரிசைப்படுத்தி வைக்கும்போது பொருத் தமற்ற பாடத்துறைகளுள் இவை மறைந்துவி டுகின்றன. எனினும் இவற்றை தொகுதியாக ஒரே நூற்தட்டுக்களிலே ஒரே வைத்துப் பயன் படுத்தும் மரபே எமது பிரதேச நூலகங்களிலே காணப்படுகின்றது. கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம் பழம்பெரும் கவிதை வடிவிலமைந்த சாஸ்திர நூலாயினும் அதன் பொருள் அரசியல் கோட்பாடாயின் அது அரசியல் என்ற பொருட்துறையுடன் வரிசைப்படுத்துவதே பொருத்தமானது. அவ்வாறே நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது இனியவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய நீதிநூல்கள் பத்தும் தூயி தசமப் பகுப்பின்படி அறநூல்கள் என்ற பாடத்துறைக்குள் ஒழுங்கமைக்கப்படுவதே பொருத்தமானது. பத்துப்பாட்டிலுள்ள திருமுருகாற்றுப்படையும், எட்டுத்தொகையிலுள்ள பரிபாடலும் இந்துசமயம் சார்ந்த நூல்களுடன் ஒழுங்கமை க்கப்படலாம்.

தொல்காப்பியர் வகுத்த பொருள் பகுப்பினடிப்படையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது கைந்நிலை முதலான நூல்கள் அகத்திணை என்ற பொருள் கூறுவனவாகும். இவற்றைத் தமிழ்இலக்கியம் - அகத்திணைக் கவிதைகள் என்ற பொருளின்கீழ் வரிசைப்படுத்துவது பொருத்தமானது. இவைதவிர பதிற்றுப்பத்து, புறநானூறு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, களவழிநாற்பது முதலான நூல்களை தமிழ் இலக்கியம் - புறத்திணைக் கவிதைகள் என்ற பொருளின் கீழ் வரிசைப்படுத்திக் கொள்ளலாம். எழுதா இலக்கியமாக விளங்கும் பழமொழித் தொகுப்புக்களை தூயி தசமப் பகுப்பாக்கம் நாட்டாரியல் என்ற பாடத்துறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்ளுமாறு வழிப்படுத்துகின்றது. பழமொழிகளின் தொகுப்பாக உள்ள பழமொழி நானூறு நாட்டாரியல் சார்ந்த நூல்களுடன் ஒழுங்கமைப்பதே பொருத்தமானது. தவிர வேறு வேறான பொருட்துறைகளைச் சேர்ந்த நூல்களை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற மரபு தலைப்பின் கீழ் ஒழுங்கமைப்பது பொருத்தமற்றது.

தற்கால நூலகங்களில் ஒரு தகவலை அணுகும்போது ஆசிரியர், தலைப்பு என்பவற்றிற்கு வழங்கும் முதன்மையிலும் பார்க்க விடய அடிப்படையிலான அணுகுகைக்கே முதன்மை காணப்படுகின்றது. சொற்றொடர்களில் எழுத்துத் தவறுகள் இல்லாமல் ஒரே சீரான பொருட் தலையங்கங்களை உருவாக்கி அவற்றை வாசகருக்கு பழக்கப்படுத்திவிடுவதன் மூலம் நூல்களை வாசகர் ஒரு தொகுதியாகத் தேடிக்கொள்ள நூலகர்கள் உதவலாம். பின்வருவன போன்ற பொருட் தலைப்புக்கள் பழந்தமிழ் இலக்கியங்களின் அணுகுகையை இலகுபடுத்தும். இவைபோன்ற விடயத் தலையங்கங்களும் தேடுதலுக்கு உதவியளிக்கும்.

உதாரணம்:-

தமிழ் இலக்கியம் - அகத்திணைக் கவிதை

தமிழ் இலக்கியம் - புறத்திணைக் கவிதை

தமிழ் இலக்கியம் - பா;மொழிகள்

தமிழ் இலக்கியம் - சமயநூல்கள்

தமிழ் இலக்கியம் - நீதிநூல்கள்

எட்டுத்தொகை நூல்கள்

பத்துப்பாட்டு நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

என்ற வகையிலான விடயத் தலையங்கங்கள் அல்லாத திறவுச் சொற்கள் ஒரே தொகுதியாக இவற்றைத் தேடிக்கொள்வதற்குப் பெரிதும் உதவியளிக்கும்.

தொன்மைச் செம்மொழியான தமிழின் இலக்கிய வெளிப்பாட்டு வடிவமாகக் 'கவிதை' என்பது தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. மேனாட்டார் வருகையுடன் தமிழ்மொழியில் உரைநடை அறிமுகமான பின்னரும் கூட நவீன தமிழ்க் கவிதைகள் தோற்றம் பெற்றவாறே உள்ளன. பொதுவாக நோக்கும் போது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை கவிதை என்பது தமிழில் முக்கியமான இலக்கிய வெளிப்பாட்டு உருவமாக இருக்கின்றமையை அவதானிக்கலாம். இக் கவிதைகள் பல்வேறு வடிவங்களைக் கொண்டுள்ளன. ஆற்றுப்படை, உலா, கலம்பகம், கோவை, பிள்ளைத்தமிழ் என வெவ்வேறு அமைப்புக்களில் உள்ளன.

தமிழ்இலக்கியப் பெரும்பரப்பு கவிதை என்ற வடிவத்தையே மிக அதிகமாகக் கொண்டுள்ளது. இந்நிலையில் தூயி குறிப்பிடும் கவிதைக்குரிய உருவ வெளிப்பாட்டுக் குறியீடான 1 என்பதை மட்டும் பயன்படுத்தி நுணுக்கமான ஒரு பகுப்புமுறையை ஏற்படுத்தமுடியாதுள்ளது. தமிழ்இலக்கியங்கள் சார்ந்து சுட்டிக் காட்டப்படத்தக்க இன்னுமொரு குழப்ப மான தன்மையும் உள்ளது. தமிழில் நவீன கவிஞரான சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளிலிருந்து இன்றைய திகதியில் வெளிவரும் நவீன கவிதைகள் வரை 'நவீன தமிழ்க்கவிதை' என்ற பொருளடிப்படையில் ஒழுங்கமைக்கப்படுகின்றன. சித்தர் பாடல்கள், திரையிசைப்பாடல்கள் போன்றனவும் நவீன தமிழ்க்கவிதைகளுடனேயே நூற்றாட்டுக்களிலே வரிசைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான நவீன கவிதை நூல்களை ஒழுங்கமை த்துக்கொள்வதிலும் உள்ளூர் நூலகங்கள் கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது. தமிழ்க் கவிதைப் பெரும்பரப்பை நுணுக்கமாகப் பகுக்கக்கூடிய சிறப்புத் துணை அட்டவணை உருவாக்கப்படவேண்டியது அவசியமானது. தமிழ் இலக்கியங்கள் எழுந்த காலப்பகுதிக்கான சிறப்பு அட்டவணையுள், கவிதைகளேயாயினும் அவை வெளிப்படும் வடிவ அடிப்படையிலும் இச்சிறப்பு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு பிரயோகிக்கப்படுவதன் மூலம் நுணுக்கமான பகுப்புமுறை ஒன்றை இலக்கியங்கள் சார்ந்து ஏற்படுத்திக்கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. அழகக்கோன். உதித்த தமி:ங்கம் எம். எஸ்.எம் ஹிறாம் (2006) தூயி தசாம்ச பகுப்பாக்கம்: பிரயோக அணுகல், கொழும்பு, தேசிய நூலக ஆவணவாக்க சேவைகள் சபை.
2. கந்தையாபிள்ளை, ந. சி, தொகுப்பு கோ. தேவராசன் (2003) கலித்தொகை பரிபாடல் சென்னை, அமிழ்தம் பதிப்பகம்.
3. சிவதம்பி, கா (1988) தமிழ்ல் இலக்கியவரலாறு, சென்னை, நியூசெஞ்சரி புக்ஹவுஸ்
4. சுப்பிரமணியன், ச. வே பதிப்பாசிரியர் (2006) சங்க இலக்கியம் (முழுவதும்) சென்னை மணிவாசகர் பதிப்பகம்.
5. சுப்பிரமணிய அய்யர். ஏ. வி. (1959) தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, தேனாம்பேட்டை, அமுதநிலையம்.
6. சிறிஸ்கந்தராசா, இ (2008). 54 பா:ந்தமிழ் இலக்கிய நூல்களில் உள்ள சிறப்புத் தகவல்கள் கொழும்பு. ரெக்னோ பிரின்டேர்ஸ்.
7. செல்வநாயகம். வி. (1960) தமிழ் இலக்கிய வரலாறு, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா அச்சகம்.

8. தொல்காப்பியம். பொருளதிகாரம்: (அகத்திணையியல் - புறத்திணையியல்). (1997) சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

9. பாலசுந்தரம். விமலாம்பிகை (1992) நூலகவியலில் பட்டியலாக்கம். திருநெல்வேலி. யாழ்ப்பாணப் பல்கலைக்கா:க வெளியீடு.

10. முத்துராசன். கு. (1985) சங்ககாலம். சேலம். தேன்மொழி பதிப்பகம்.

11. ஸ்ரீ காந்தலட்சுமி. அ (2005) நூலகப் பகுப்பாக்கம்: நூலகர் கைநூல். யாழ்ப்பாணம். நூலக விழிப்புணர்வு நிறுவகம்.

12. ஸ்ரீகாந்தலட்சுமி. அருளானந்தம் (2008) நூலக தகவல் அறிவியல் ஆய்வுக்கோவை. கொழும்பு. சேமேடு பதிப்பகம்.


### ஆங்கில நூல்கள்


1. Anglo - American Caloguing rule - 2 nd edion. (1978) London, The library Association.

2. Anglo - American cataloguing rule (2002), Prepared under the direction of the Joint Steering Commitee for revison of AACR/ a committee of the American Library Assocation... (et al)., Ottawa, Canadian Library Association.

3. Aswal, RS (2005) $AACR_2$ with $MARC_2$: Cataloging practice for 21 st century, Newdelhi, Ess Ess Publications.

4. Chan, Lois Mai (2007) Library of Congress Subject headings: Principles and Application, London: Ess Ess Publication.

5. Dwey, Melvil(2011) Deway Decimal Classification and relative index - ed 23/ Dublin: OCLC.

6. Shera, Jesse. h; (and) Margaret. E. Egan (1956) The Classified catalog: Basic Principal and Practies, Chlcaco, American Library Assocations.